செ.வெ. எண்: 270 நாள்: 25.04.2012

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (25.4.2012) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையில் பணிக் காலத்தில் இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணிநியமன ஆணைகளையும், பொதுப்பணித் துறையில் பணியாற்றும் பொறியாளர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக 45 வாகனங்களையும் வழங்கினார்கள்.

பொதுப்பணித் துறையில் பணிக் காலத்தில் இயற்கை எய்திய 160 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில், இளநிலை உதவியாளர் பணிக்கான பணி நியமன ஆணை 50 பேருக்கும், தட்டச்சர் பணிக்கான பணி நியமன ஆணை 8 பேருக்கும், ஓட்டுநர் பணிக்கான பணி நியமன ஆணை 7 பேருக்கும், பதிவுரு எழுத்தர் பணிக்கான பணி நியமன ஆணை 22 பேருக்கும், காவலாளர் பணிக்கான பணி நியமன ஆணை 11 பேருக்கும், உதவி வரைவாளர் பணிக்கான பணி நியமன ஆணை 20 பேருக்கும், பாசன உதவியாளர் பணிக்கான பணி நியமன ஆணை 26 பேருக்கும், தோட்டக்காரர் பணிக்கான பணி நியமன ஆணை 8 பேருக்கும், துப்புரவு பணியாளர் பணிக்கான பணி நியமன ஆணை 7 பேருக்கும் மற்றும் ஆய்வக உதவியாளர் பணிக்கான பணி நியமன ஆணை 1 நபருக்கும், என மொத்தம் 160 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கி வாழ்த்தினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து பணி நியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்ட வாரிசுதாரர்கள், தங்கள் குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு கருணை அடிப்படையிலான பணி வழங்கி தங்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டார்கள்.

மேலும், பொதுப்பணித் துறை கட்டட அமைப்பைச் சார்ந்த மாவட்ட தலைமையகங்களில் இயங்கி வரும் உப கோட்டங்களில் உள்ள உதவிச் செயற்பொறியாளர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக 31 ஜீப்புகள், நீர்வள ஆதாரத் துறையின் செயற் பொறியாளர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக 10 ஜீப்புகள், தலைமைப் பொறியாளர்கள் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களின் அலுவலக பயன்பாட்டிற்காக 4 சீருந்துகள் என மொத்தம் 45 வாகனங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், பொதுப் பணித்துறைச் செயலாளர் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
நாள்: 25.4.2012